திரு. கே. கோபிநாத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட தியாகி வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டுவதற்கு அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய சகோதரி செல்வி கே. பாலபாரதி அவர்கள் காங்கிரஸ்காரர்களுக்கு முன்னாலேயே சுதந்திரப் போராட்டத்தில் போராடியவர்கள் என்றார்கள். நாங்கள் அதை மறுக்கவில்லை. சுதந்திரப் போராட்டத்தில் காங்கிரஸ்காரர்களுடைய பங்கு மிகவும் அதிகம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்று இந்த அவையிலே நான் இல்லை. தயவு செய்து எனக்கு ஒரு நிமிட நேரம் பேசுவதற்குத் தாருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் என்னுடைய தொகுதிக்கு ஒரு Arts College *கொடுத்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)* Madam, I salute you for the endowment of benevolence and a long cherished dream of Hosurians has been fulfilled by thy grace. We are indebted to your kind self and are ever grateful to you.

(உறுப்பினர் தொடர்ந்து தெலுங்கில் பேசினார்.)

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 191, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

191—

தங்கும் விடுதிகள்

6407—திரு. கே. தங்கவேல்:

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் தொழிலாளர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

2013 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

என்னுடைய தூத்துக்குடி மாவட்டம் வீரம் நிறைந்த மண். அந்த மண்ணின் வீரத்திற்கு எடுத்துக்காட்டாக, முதல் சுதந்திரப் போராட்டத் தியாகியாகத் திகழ்ந்த வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு, அவர் இறந்த இடத்தில் மணி மண்டபம் கட்ட உத்தரவிட்ட மரியாதைக்குரிய மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தூத்துக்குடி மாவட்ட மக்களின் சார்பாக எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டம் பிரிவு 17 (2)-ன்படி சுற்றுலாத் தலங்களில் மட்டுமே விடுமுறை இல்லங்கள் கட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. திருப்பூர் போன்ற நகரங்களில் தொழிலாளர்கள் தங்கும் விடுதிகளைக் கட்ட, மேற்படி சட்டப் பிரிவுகளில் வழிவகை ஏதும் செய்யப்படவில்லை. எனவே, சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ளவாறு தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின்மூலம் திருப்பூரில் தொழிலாளர்கள் தங்கும் விடுதிகளைக் கட்ட இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் பனியன் மற்றும் அந்தத் தொழில்சார்ந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்தும், வட மாநிலங்களிலிருந்தும் வந்து வேலை செய்கிறார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வீடு என்ற அடிப்படையில் வாடகைக்கு எடுத்து தங்கக் கூடிய அளவிற்கு வருமானம் அவர்களுக்கு இல்லை. எனவே, தனித்தனியாக இவர்களுக்கு விடுதிகள் அமைத்து, ஆண்கள் மற்றும் பெண்களுக்கு விடுதிகள் தரும்பட்சத்தில் அவர்கள் வேலை செய்வதற்கும், அந்த சிறு தொழில் பாதுகாக்கப்படுவதற்குமான முறையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலனை செய்ய வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களுடைய தங்கும் விடுதிகள் சுற்றுலாத் தலங்களில்தான் அமைக்கப்படும். ஆனால், நீங்கள் கேட்பதுபோல் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு விடுதி கட்ட வேண்டும் என்ற அந்தக் கருத்து இந்தக் கேள்வியில் எழாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், தொழிலாளர்களுடைய நல வாரியம் என்பது தொழிலாளர்களுக்காக, அவர்களுடைய பிரச்சினைகளை வெளியூரில்—சென்னைக்குச் செல்ல வேண்டும் என்று சொன்னால்—அங்கே சென்று பேசுவதற்காக இங்கே ஜீவா இல்லம் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கட்டப்பட்டது. அதுமட்டுமல்லாமல், தொழிலாளர்கள் கொடுமையான இடத்தில் வேலைபார்த்து ஓய்ந்திருக்கிறார்கள். அவர்களும் பணக்காரர்களைப்போல, பிறரைப்போல அந்தச் சுகத்தை அனுபவிக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில்தான் முதன்முதலாக வால்பாறையிலும் சரி, குற்றாலத்திலும் சரி, மாமல்லபுரத்திலும் சரி, கட்டப்பட்டது. அதன்பின், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக ஆட்சி பொறுப்பேற்றபோது, ஜீவா இல்லம் பழுதுபட்டுக் கிடந்தது. அதை புதுப்பிக்க வேண்டும் என்ற அடிப்படையிலே அதற்கு ரூ.30 இலட்சம் கொடுத்து, பணிகள் மேற்கொள்ளப்பட்டு இன்றைக்கு அது புதுப்பொலிவுடன் திகழ்ந்துகொண்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நீங்கள் கேட்பது தொழிலாளர்கள் தங்கும் விடுதி. அதனை அங்கே இருக்கின்ற தொழில் ஸ்தாபனத்தைச் சார்ந்த உரிமையாளர்கள், முதலாளிகளிடம்தான் கேட்க வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.

திரு. கே. தங்கவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தினுடைய இட மதிப்பு, அங்கு இருக்கக்கூடிய தொழில் நிலைமை இவற்றைக் கணக்கில் எடுத்துக்கொள்ளும்போது, அங்கு வீட்டு வசதி வாரியமோ அல்லது வாடகைக்குக் குடியிருக்கக்கூடிய நிலைமையிலே இல்லை. ஏராளமான வட மாநிலத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். தென் மாவட்டங்களிலிருந்தும், கேரளாவில் இருந்தும் ஆண்களும், பெண்களுமாக ஏராளமான பேர் வந்து வேலை செய்கிறார்கள்.

முற்பகல் 11-10

இவர்களுக்குத் தங்கும் விடுதி போல அல்ல; நிரந்தரமாக அவர்கள் தங்கி வேலை செய்கின்ற அடிப்படையிலே ஹாஸ்டல் போல அவர்களுக்கு அமைத்துக் கொடுப்போமேயானால்—இது புதிய முறைதான். ஏற்கெனவே இல்லை என்பதால் எப்போதும் இல்லை என்று சொல்ல வேண்டியதில்லை. அதற்கான ஆலோசனைகளை, தொழிலாளர் நலத் துறை மேற்கொள்ள வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பரிசீலிக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

திரு. க. பாண்டியராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி, விருதுநகர் சார்ந்த 800 பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளைத் தடுத்திட, occupational health and safety OSHAS தரக்கட்டுப்பாடு கட்டாயமாக்கப்படுமா? I.S.O. தரக் கட்டுப்பாட்டிற்கு அளிப்பதுபோல அரசின் மானிய நிதி உதவி இதற்குத் தரப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியை உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். தனிக் கேள்வி போடும்படி உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்காலத்தில் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய தொழிற்சங்கத் தலைவர்கள் சென்னைக்கு வருகின்றபோது, பேச்சுவார்த்தையில் கலந்துகொள்கின்ற முறையில் ஜீவா இல்லம் என்கின்ற ஒரு இல்லத்தை முதன்முதலாகத் தொடங்கிவைத்த பெருமை இந்த அரசுக்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அது விரிவுபெற்று பரவலாகத் தமிழகத்திலே பல்வேறு இடங்களில் கட்டப்பட்டு தொழிலாளர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வால்பாறை சட்டப் பேரவைத் தொகுதியில் சிங்காரவேலர் நினைவு இல்லமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கக்கூடிய அந்த இல்லத்தையே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில், ஒரு ஓட்டலுக்கு வாடகைக்கு விட்டு, அங்கு இப்போது தொழிலாளர்கள் தங்குவதற்கான வாய்ப்பு இல்லாத சூழல் இருந்து வருகிறது. எனவே, அதனைக் காலி செய்து தொழிலாளர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்துதர முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இதுபோல பல துறைகளில் குளறுபடிகள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால், இன்றையதினம் தர்மத்தாயினுடைய ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர்

2013 ஏப்ரல் 9]

புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையின்படி அந்த இடத்தில் நியாயமான நீதி கிடைக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது. அங்கேயிருக்கின்ற கடைகளை அப்புறப்படுத்துவதற்கு ஏற்கெனவே நாங்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கின்றோம். கூடிய விரைவில் அதற்கொரு முடிவு ஏற்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 192, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. பழனிச்சாமி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

192—

மாணவியர் விடுதி

***8922—திரு. ச. பழனிச்சாமி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் பொற்கால முதல்வர், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய ஆட்சியில் தமிழகத்திலுள்ள அனைத்துக் குழந்தைகளும் கல்வி கற்க வேண்டும், கல்வியைக் கற்க எந்தத் தடையும் இருக்கக்கூடாது என்று, கல்வி கற்கும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் அனைத்து வசதிகளையும் சிறப்பாகச் செய்து வருகிறார்கள். வேடசந்தூரில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதி மாண்புமிகு